CASE NO.    CC 327/2022

Date    12.06.2025

பெயர்    PW 1 - பாலையா த/பெ சேதுமணி

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் சிகங்கை ஆரியபவர் ஓட்டலில் மேலாளராக வேலைப் பார்த்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வெளிநாட்டில் வேலைப் பார்த்து வந்தேன். நான் ஆரியபவர் ஓட்டலில் ரூபாய் 20,000/- சம்பளம் பெற்று வருகிறேன். நான் வெளிநாட்டில் வேலைப் பார்த்து வந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் 3 பெண் குழந்தைகள் உள்ளார்கள்.

2) எனது மூத்த மகள் மதுரையில் படித்து வருகிறார், இரண்டாவது மகள் கோயமுத்தூரில் பொறியியல் படித்து வருகிறார், 3 வது மகள் சிவகங்கையில் உள்ள தனியார் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வருகிறார். நான் சொந்த வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எத்தனை வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் சிட்டி யூனியன் பேங்க், யூனியன் பேங்க், கனரா வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சிஸ் பேங்க் ஆகிய வங்கிகளில் கணக்கு வைத்துள்ளேன்.

3) நான் எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லப்படும் தொகையை வங்கிப் பரிவர்த்தனை மூலம் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்தற்கு எந்த விதமான புரோ நோட்டோ, பத்திரமோ எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் எனது வருமான வரி கணக்கு சம்பந்தமான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வங்கிக் காசோலை ம.சா.ஆ.1 ல் உள்ள எனது கையெழுத்தும் மற்றும் மற்ற விவரங்கள் வெவ்வேறு மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Web copy

4) நான் பணம் கொடுத்தாக சொல்லப்படும் காலகட்டத்திற்கு சம்பந்தப்பட்ட வருமானவரி கணக்குகளை தாக்கல் செய்யத் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எதிரி எனக்கு என்ன உறவு என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான் அவர் எனக்கு சித்தி வழியில் சொந்தமாவார். எந்த தொழில் செய்வதற்காக எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்று குறிப்பிட்டு புகார் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான்.

5) எதிரிக்கு நான் பணம் கொடுக்கும்போது யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்ற விவரத்தை புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு தரவேண்டிய வட்டி ரூபாய் 24,000/- த்தை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் நான் பணத்தை தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கேட்டேனா என்றால் நான் தொலைபேசி மூலமாக கேட்டேன்.

6) எந்த தொலைபேசியிலிருந்து நான் எதிரியைத் தொடர்பு கொண்டேன் என்றால் அது பற்றிய விவரங்களை தாக்கல் செய்யவில்லை. நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது வட்டி வாங்கினேனா என்றால் இல்லை நான் கொடுத்த அசல் தொகை ரூபாய் 3,00,000/- த்திற்கு வங்கி காசோலை மட்டும் கொடுத்தார். எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரியின் தொலைந்து போன வங்கி காசோலையை ஆதாயம் பெறுவதற்காக அதை தொகையை நிரப்பி இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) எதிரி எனக்கு சட்டப்படியான கடன் எதுவும் கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை நீதிமன்றத்தில் வைத்து தான் பார்த்தார் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம்**, B.Sc., B.L., 12.06.2025,
நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

Webcopy